பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(18.10.2023 முதல் 22.10.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 83 (10) PJN/GKMS/2023 தேதி: 17.10.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (12.10.2023 முதல் 16.10.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -22.10.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12/10 | 13/10 | 14/10 | 15/10 | 16/10 | | நாள்-1 18/10 | நாள்-2 19/10 | நாள்-3 20/10 | நாள்-4 21/10 | நாள்-5 22/10 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 8 | 10 | 10 | 10 | 10 |
| 36 | 35 | 33 | 34 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 32 | 32 | 32 | 31 | 31 |
| 26 | 27 | 25 | 25 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25 | 25 | 25 | 24 | 24 |
| 3 | 5 | 4 | 4 | 5 | மேக மூட்டம் | 8 | 8 | 8 | 7 | 7 |
| 52-84 | 69-90 | 64-89 | 62-90 | 67-85 | ஈரப்பதம் (%) | 80-90 | 80-90 | 80-90 | 76-88 | 76-88 |
| 4 | 2 | 2 | 2 | 2 | காற்றின் வேகம் (கி.மீ) | 5 | 5 | 5 | 4 | 4 |
| மேற்கு தென் மேற்கு | தெற்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் மேற்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (18.10.2023 முதல் 22.10.2023 வரை):**

- அக்டோபர் 18 லிருந்து 22 வரை மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 24-32 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 04-05 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- அக்டோபர் 22 லிருந்து 28 வரை மழை (6.13 மி.மீ), அதிகபட்ச வெப்பநிலை (30.77 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (22.66 டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | களை மேலாண்மை | நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பயிர் விதைத்து 10-12 நாட்களுக்குள் பின் பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyribac sodium) 200 கிராம் அல்லது பயிர் விதைத்து 12-15 நாட்களுக்குள் பின் சைஹலோஃபாப்-பியூட்டைல் (Cyhalofop-butyl) 350 கிராம் அல்லது பைரசோசல்ஃப்யூரான் ஈதைல் (Pyrazosulfuron ethyl) 200 |

| | | |
|---|---|---|
| | | கிராம் அல்லது பயிர் விதைத்து 30-50 நாட்களுக்குள் பின் 2,4-டி (2,4-D) 1.25 கிலோ என்ற அளவில் பயன்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்தலாம். |
| கால்நடை | ரத்தக்கசிவு செப்டிசீமியா | ரத்தக்கசிவு செப்டிசீமியா நோய் கால்நடைகளுக்கு பாக்டீரியா கிருமிகளால் ஏற்படுகிறது. இது பொதுவாக மழைக்காலத்தில் ஏற்படும் . எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோயைத் தடுக்க மழைக்கு முன்பாகவே (அக்டோபர்) தடுப்பூசி அளித்து நோயின் தாக்குதலைத் தடுத்து கால்நடைகளை பாதுகாக்கவும். |
| | தைலீரியோசிஸ் | தைலீரியோசிஸ் என்ற நோய் கலப்பின மற்றும் வெளிநாட்டின மாடுகளைத் தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் நோயாகும்.இந்நோய் ஹைலோமா எனும் உண்ணிகளால் பரவுகிறது. இந்நோயினைப் பரப்பும் உண்ணிகளின் வளர்ச்சி செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அதிகமாக இருப்பதால் நோயின் தாக்கமும் அதிகமாகும். எனவே, உண்ணிகளின் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற இடங்களான கால்நடைகளின் சாணம், கால்நடைக் கொட்டகைகளிலுள்ள இருண்ட ஈரமான மூலைகள், தேங்கியிருக்கும் தண்ணீர் போன்றவைகளிலும் கால்நடைக் கொட்டகைகளின் மூலை முடுக்குகள், சுவர் இடுக்குகள் மற்றும் மரப்பொருட்களின் இடுக்குகளில் அப்பூச்சிகளால் இடப்படும் முட்டைகளையும் அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்திருந்து இந்நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாக்கவும். |

**குறுஞ்செய்தி:** அக்டோபர் 18 லிருந்து 22 வரை மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**